ஆகவே புதிதாக அங்கு வேறு ஒரு பெண்கள் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி ஏற்படுத்தாவிட்டாலும் கூட, வேறு ஓர் இடத்திலுள்ள பெண்கள் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியை எங்கள் ஊருக்கு மாற்றிக் கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதற்கான காரண காரியங்கள் இருக்குமானல் முறைப்படி விண்ணப்பித்து அது ஆராயப்பட்ட பிறகுதான் செய்யவேண்டும். தாராபுரத்தில் இருந்ததை வேறு ஓர் இடத்திற்கு மாற்றியிருக்கிறார்கள் என்றால் ஏதாவது ஒரு காரணத்தின் அடிப்படையில்தான் மாற்றியிருக்க வேண்டும். அது சரியா இல்லையா என்பதுபற்றி விண்ணப்பித்துக் கொள்வதன்மூலம்தான் அதைப் பரிசீலிக்கவேண்டும்.

*174 வினா.—திரு. கே. போஜன் : மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா :

(அ) நீலகிரி மாவட்டத்தில் ஒரு பெண்கள் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி திறக்கக் கோரி, அம்மாவட்டத்தின் அபிவிருத்தி மன்றத்தி லிருந்து மனு வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், உடனடியாக இப்பள்ளியை நிறுவ அரசாங்கம் ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) இல்லை.

திரு. கே. போஜன் : தற்சமயம் நீலகிரி மாவட்டத்தில் பெண்கள் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி ஒன்றுமே இல்லை. எங்கள் மாவட்டத்தில் அநேக பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. நீலகிரி மாவட்டத்தில் தனியார் பெண்கள் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி ஒன்றும், கோவையில் ஒரு பெண்கள் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியும் இருக்கின்றன. அதன் காரணமாக நீலகிரி மாவட்டத்தில் உள்ள பெண்களுக்கு, அதாவது மாணவிகளுக்கு அங்கு போதிய இடம் கிடைப்பதில்லை. ஆகவே, நீலகிரியில் உள்ள ஆண்கள் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் உள்ள இடத்தைக் குறைத்தாவது பெண்களுக்கு ஒரு ஆசிரியர் பயிற்சிப் பள்ளி ஏற்படுத்த அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : ஊட்டியில் பெண்கள் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி ஒன்று தனியார் துறையில் நடைபெற்றுக் கொண்டு வருகிறது. அது நீலகிரி மாவட்டத்திற்குப் போது மானதாக இருக்கிறது என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. நான் முதலில் எடுத்துக்கூறியுள்ளபடி ஆசிரியர் பயிற்சிக்கு வருகிறவர் களின் எண்ணிக்கை கூட, வருடாவருடம் எடுத்துக் கொள்கிற எண்ணிக்கை, குறைந்துவருவதால், அதிகமான ஆசிரியர், ஆசிரி யைகளை உற்பத்தியாக்கும் நிலைமையில் இப்போது இல்லை. 1965-66ல் 12,500, 1966-67ல், 10,410, 1967-68ல் 6,750 பேர்கள்தான் தேவைப் பட்டார்கள். ஆகவே, இனிமேல் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளைக்

கூட்டுவதற்கில்லை. ஆண்கள் பயிற்சிப் பள்ளியில் உள்ள எண்ணிக்கையைக் குறைத்து பெண்கள் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியை நிறுவ முடியுமா என்று கேட்டிருக்கிறார்கள். அது தனியாகப் பரிசீலிக்கப் படவேண்டிய ஒன்று. இப்போதுள்ள பெண்கள் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் அதிக இடங்கள் தேவைப்படுகிற நிலைமைகள் ஏற்படுமானால் நாற்பது இடங்களை ஐம்பது இடங்களாக மாற்றிக் கொள்கிற ஒரு தன்மையை ஆராய்ந்தபிறகு, தேவைப்படுமானால் செய்யலாம் என்று ஒரு குறிப்பு இருக்கிறது. அந்த வகையில் வேண்டி வந்தால் ஆராய்ந்து பார்க்கலாம்.

Selection of students in teochers training schools

* **175 Q.—Dr. H. V. HANDE** : Will the Hon. the **Minister for Education and Health** be pleased to state :

(a) whether the Government have issued orders to the Inspectors of Schools, not to select handicapped candidates, such as those affected with infantile paralysis, etc., for the Teachers' Training ; and

(b) if so, the reasons therefor?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) நடைமுறையில் இருக்கிற நிலை விதிமுறைகளின்படி, இயற்கையிலே உடல் ஊனம் உள்ளவர்கள் அல்லது ஊனக்குறைவைத் தேடிக் கொண்டவர்கள் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் பொதுவாகச் சேர்த்துக்கொள்ளப் படமாட்டார்கள். ஆனால், அக்குறைபாடு ஆசிரியப் பணிகளைத் திறமையுடன் நிறைவேற்றுவதற்கு எவ்வகையிலும் இடர்பாடாக இராத அளவுக்குச் சிறு குறையாக இருக்கிறதெனக் கருதப் பட்டால், பள்ளிக் கல்வி இயக்குநரின் ஒப்பளிப்பைப் பெற்றுக் கொண்ட பின்னர், அவர்கள் பயிற்சிக்குச் சேர்த்துக்கொள்ளப் படலாம்.

(இ) ஆசிரியர் பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் பயிற்சிக்குப்பின், பொதுவாக 5 முதல் 12 வயதிற்கிடைப்பட்ட சிறுவர்களுக்குக் கல்வி கற்பிப்பதற்கு உரியவர். உடல் ஊனம் உள்ளவர்களைக் கேலி செய்யக்கூடாதென்ற மனப்பக்குவத்தை இந்த வயது வரம்பிற்குட்பட்ட சிறுவர்களும், இளம் பருவத்தினரும் பெற்றிருக்க மாட்டார்கள். வகுப்பு ஆசிரியர்களிடம் ஊனக்குறைவு இருப்பது அவர்களைக் கேலி செய்யும் உணர்ச்சியைச் சிறுவர்களிடம் தூண்டக்கூடும்.

Dr. H. V. HANDE: Sir, we cannot generalise that such persons will be made fun of by small boys and girls. Special consideration must be given to the handicapped persons especially small children affected by infantile paralysis such children may be brilliant as there are such brilliant handicapped persons even among adults. There is also a G.O. which says that those who suffer from such handicaps will be given preferential treatment or opportunities in certain jobs. So, will the Government revise its old order and see that such handicapped persons are given preference over other normal persons in regard to these posts?